# *இலங்கையில் கொவிட்-19 முடக்கல்கள், முறையற்ற நிர்வாகத்தால் ஏற்பட்ட நிதி நெருக்கடியும் மனித உரிமை மீறல்களும்*

Halideen Fathima Rifasha

*University of Peradeniya*

*rifasha992@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம்***

*ஒரு மனிதன் மனிதனாகப் பிறந்ததன் காரணமாக அவன் இயல்பாக அனுபவித்து வாழவேண்டிய இயற்கையான சுதந்திரங்களையும் உரித்துக்களையும் மனித உரிமைகள் என பொதுவாகக் கூறலாம். இத்தகைய மனித உரிமைகளை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியில் பல்வேறு பாதுகாப்புப் பொறிமுறைகள் உள்ளன. 1978 ஆம் ஆண்டு இரண்டம் குடியரசு யாப்பில் அடிப்படை உரிமை தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. அந்தவகையில் உலகளாவிய ரீதியில் ஏற்பட் கொவிட்-19 தொற்று நோய் உலக பொருளாதாரத்தை எதிர்மறையாக பாதித்துள்ளது. இது இலங்கையிலும் பாரியளவில் தாக்கம் செலுத்தியுள்ளது. அத்தோடு கொவிட்-19 இற்கு முன்னரான முறையற்ற வரி நடவடிக்கை, ஈஸ்டர் தாக்குதல், கொவிட்-19 முடக்கல்கள் என்பன அந்நியச் செலாவணியைக் குறைத்துள்ளது. இவை இலங்கை மக்களுடைய சமூக, பொருளாதார, வாழ்வாதாரம் என்பனவற்றைப் பாதித்துள்ளது. அதாவது எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எரிபொருட்களை பெரும்பொருட்டு நீண்ட வரிசையில் நிற்பதால் தமது வேலை நேரங்களை இழக்கின்றனர். இதனால் பொருளாதார உரிமை சவாலுக்குட்படுவதோடு அரச கொள்கை வழிகாட்டல் தத்துவத்தின் கீழ் விதி 27 (2) (ஈ) ஆனது பகிரங்க தனியாள் முயற்சி, தனியாள் பொருளாதார முயற்சியின் மூலம் நாடு முழுவதையும் விரைவாக அபிவிருத்தி செய்ய தவறியுள்ளது எனலாம். அத்தோடு அரச கொள்கை தத்துவத்தின் விதி-27 (9) கீழ் சமூக பொருளாதார சேம நலனையும் அரசு உறுதிப்படுத்த தவறியுள்ளதால் இலங்கையினது அத்தியவசிய மருந்து பற்றாக்குறை மற்றும் அத்தியவசிய பொருட்களுக்காக போராடி வரிசையில் நின்று உயிரிழப்புக்கள் ஏற்பட்டதோடு நாட்டை விட்டு மக்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இவ் அபாயம் அதிகரிக்கக் கூடிய நிலை உள்ளதால் சமூக உரிமை தொடர்ந்தும் பேராபத்தில் உள்ளது எனலாம். மேலும் கல்வி கலாசார உரிமையானது தொடர்ந்தும் பாதித்துள்ளது எனலாம். அத்தோடு அரசகொள்கைத் தத்துவத்தின் விதி 27 (7), (2)-(அ) கீழ் சமூக ஏற்றத்தாழ்வையும் சுரண்டலையும் ஒழிக்கத் தவறியுள்ளதோடு, சமூக பொருளாதார, அரசியல் விடயங்களில் நீதியை பின்பற்றத் தவறியுள்ளது. மேலும் இத்தகைய முறையற்ற நிர்வாக செயற்பாட்டினால் சுற்றுலாத்துறை, விவசாயம் பாதிக்கப்பட்டு மக்களது வாழ்வாதார உரிமை கேள்விக்குள்ளாகியுள்ளது. மேலும் இத்தகைய நிதி நெருக்கடியினால் அதிகரித்த அரச எதிர்ப்பைத் தெரிவிக்கும் கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டதோடு சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டமை அடிப்படை உரிமை அத்தியாயம் 03, விதி 14 (அ) இனை மீறுகிறது. அத்தோடு நிதி நெருக்கடி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டதோடு சுடப்பட்டு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். இது அடிப்படை உரிமை அத்தியாயம் 03, விதி 14 இனை மீறுகின்றது. அதாவது (அ)- பேச்சு, கருத்து வெளிப்படுத்தல் சுதந்திரம், (ஆ)- அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரம், (இ)- ஒருங்கு சேருவதற்கான சுதந்திரம், (ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி பயணிக்கும் உரிமைகளை மீறுகின்றது எனலாம். இவ் ஆய்விற்குப் பண்பு ரீதியான தரவுப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது சிந்தனைகள், கருத்துக்கள், சொற்கள், பதங்கள், போன்றன பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலை தரவான ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பில் இருந்தும் இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிக்கைகள் மற்றும் இணையத்தளங்கள் என்பவற்றில் இருந்து தரவுகள் பெறப்பட்டு தொகுத்தறிப் பகுப்பாய்வின் மூலம் முடிவுகள் பெறப்பட்டுள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *அடிப்படை உரிமை, அரசகொள்கை தத்துவம், பொருளாதார நெருக்கடி, மனித உரிமை மீறல்*

---


ISBN: 978-624-5736-55-3

*1.* ***அறிமுகம்:***

*சுதந்திரமாக பிறந்த மனிதன் பல்வேறு தேவைகளுக்காக சமூகத்துடன் இணைந்து வாழவேண்டியுள்ளது. இதன் போது பலமான மனிதன் பலவீனமான மனிதனை துன்புறுத்தியும், செல்வந்தர்கள் வறியவர்களை சுரண்டியும், அதிகாரமிக்கவர்கள் தமக்குக் கட்டுப்பட்டவர்களை அடக்கியொடுக்கியும் வாழ்கின்றனர். எனவேதான் சமூகத்தில் தனிமனிதன் தனது ஆளுமையையும் சுதந்திரத்தையும் முழுமையாக அனுபவிப்பதற்கு அவனுக்கு பாதுகாப்புக் கருவி தேவைப்படுகின்றது. அதுவே மனித உரிமைகளாகும். இத்தகைய மனித உரிமைகளை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உலகளாவிய ரீதியில் பல்வேறு பாதுகாப்புப் பொறிமுறைகள் உள்ளன. சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம், ஐ.நா வின் மனித உரிமைப் பாதுகாப்புப் பொறிமுறை போன்ற பல்வேறு சர்வதேச ஏற்பாடுகள் காணப்படுகின்றன* (Ambalavanan, 2008). *அந்தவகையில் சர்வதேச, பிராந்திய ரீதியில் மனித உரிமை பாதுகாப்புப் பொறிமுறைகள் காணப்படினும் இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கடப்பாடு அரசு, மக்கள் ஆகிய இருதரப்பிற்கும் இருக்க வேண்டும். அப்போழுதே இவை சாத்தியப்பாடுடையதாய் இருக்கும். இக்கடப்பாடு இல்லையேல் இவை இருந்தும் பயனற்றதாகும். அந்தவகையில் இலங்கையில், 1978 ஆம் ஆண்டு இரண்டம் குடியரசு யாப்பில் அத்தியாயம் 3 இல் அடிப்படை உரிமைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).*மேலும் உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட கொவிட்-19 தொற்று நோய் உலக பொருளாதாரத்தை எதிர்மறையாக பாதித்துள்ளது. இது இலங்கையினது பொருளாதாரத்தையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அத்தோடு ஆட்சியாளர்கள் சீனாவிடம் இருந்தும் ஏனைய நாடுகளில் இருந்தும் காலத்திற்கு காலம் அதிகளவான கடன்களை உட்கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் பெற்றுக் கொண்டனர். இலங்கை சீன முதலீட்டைச் சார்ந்து இருப்பதும் ஏற்கனவே பல கொள்கை தவறுகளுக்கு வழிவகுத்துள்ளது* (Silva, 2022). *மேலும் முப்பது வருடகால யுத்தம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறையாக பங்களித்தது. அத்தோடு இலங்கையின் பொருளாதாரம் பெரும்பாலும் சுற்றுலாத்துறையை மையமாகக் கொண்டு நகர்கின்றது. 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட்-19 முடக்கல்கள் என்பன சுற்றுலாத்துறையை வெகுவாக பாதித்தது* (Hindutamil, 2022). *மேலும் தொற்று நோய்க்கு முந்தைய வரிகுறைப்புக்கள் இலங்கையின் நிதி சமநிலையற்று நெருக்கடிநிலைமையை ஏற்படுத்தியது. 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.1 சதவீத வீழ்ச்சி அடைந்துள்ளது (*BBC *2022). இலங்கையானது தனது வருவாயில் 80 சதவீதத்தை வாங்கிய கடனுக்கு வட்டி கட்டும் நிலைக்கு உள்ளானது (*Silva *2022). இவ் நெருக்கடி பல்வேறு வடிவங்களில் இலங்கை மக்களைப் பாதிக்கின்றது.*

***2. இலக்கிய மீளாய்வு***

Yasoda,W. (2022), *எனும் ஆய்வாளர் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது இலங்கையர்களுடைய சுகாதாரம், கல்வி, உணவு முறைமையின் சமநிலையைப் பாதித்துள்ளதோடு மனித உரிமைகளை மாசுபடுத்தியுள்ளது என்கிறார். இது சர்வதேச நாடுகளின்*


ISBN: 978-624-5736-55-3

*ஜனநாயக செயற்பாட்டில் கவனத்தை ஈர்த்துள்ளது என்கிறார். இதில் அடிப்படை உரிமைகள் மற்று அரச கொள்கை வழிகாட்டடல் தத்துவம் தொடர்பாக ஆராயப்படவில்லை.*

Lisa, S. (2022), *எனும் ஆய்வு அறிக்கையில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகள் நாடு முழுவதும் பரவுவதாக ஆராய்கிறது. மேலும் இதற்குத் தேவையான சட்ட, அரசியல், பாதுகாப்பு நிறுவனங்களை சீர்திருத்துதல் வேண்டும் என்கிறது. இதில் அடிப்படை உரிமைகள் பற்றி ஆராயப்படவில்லை.*

acaps.org, (2022), *எனும் நிறுவனத்தினது ஆய்வானது கொவிட்-19 நெருக்கடி, உக்ரைன்-ர~ய முரண்பாடு என்பன இலங்கையின் நிதி பற்றாக்குறையில் தாக்கம் செலுத்தியதாக ஆராய்கிறது. இதனால் இலங்கை மக்கள் பல்வேறு அத்தியாவசியமான தேவைகளை பெற்றுக் கொள்வது சவாலை ஏற்படுத்தியது. குறிப்பாக வெளிநாட்டு நாணயங்களின் கையிருப்பு நிலை குறைவடைந்ததால் உணவு, எரிபொருள், உரம், மருந்து, சுகாதார தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது. இது சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், தாய்மார்கள் என்போர் உள்ளடங்களாக 1.7 மில்லியன் மக்களை வெகுவாக பாதித்தது. இவ் ஆய்வில் அடிப்படை உரிமைகள் மற்று அரச கொள்கை வழிகாட்டடல் தத்துவம் தொடர்பாக ஆராயப்படவில்லை.*

news.un.org, (2022), *எனும் நிறுவனத்தினது ஆய்வில் இலங்கையினது பொருளாதார சரிவில் சர்வதேச கவனம் தேவை என்கிறது. அதாவது மனித உரிமை முகவர்கள் அல்லாமல் சர்வதேச நிதி முகவர்கள், தனியார் தலைமைத்துவம் மற்றும் ஏனைய நாடுகளின் நிதி உதவி தேவை எனக்கூறுகிறது.*

### *3. **ஆய்வுப் பிரச்சினை***

***2020** ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின்னரான முடக்கம் மற்றும் அரசினால் கலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற நிர்வாக செயற்பாடுகள் மற்றும் சர்வதேச சந்தையுடனான தொடர்பிழப்பு என்பன இலங்கையினுடைய அந்நியச் செலாவனியைப் பாதித்துள்ளது. இத்தகைய நிதிநெருக்கடி நிலை இலங்கை வாழ் மக்களினுடைய இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகிறது. அதாவது அடிப்படை தேவைகளான உணவு, மருந்து, கல்வி, சிறந்த வாழ்க்கை போன்றனவற்றை அரசு வழங்க தவறுகின்றமை ஆய்வுப்பிரச்சினையாகும்.*

*அந்தவகையில் இரண்டாம் குடியரசு யாப்பில் அடிப்படை உரிமை தொடர்பாக எத்தகைய ஏற்பாடுகள் உள்ளன?, ஜனநாயக சோசலிச சமூகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு கடைப்பிரக்கவேண்டிய விதிகள் தொடர்பாக அரசகொள்கை வழிகாட்டடல் தத்துவம் எத்தகைய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன?, இலங்கையின் பொருளாதார நிதி நெருக்கடியின் பின்னணியில் இலங்கை மக்களது மனித உரிமை, அடிப்படை உரிமை பேணப்படுகின்றதா?, பொருளாதார நிதி நெருக்கடியின் கீழ் அரசகொள்கை வழிகாட்டடல் தத்துவத்தினை அரசு எந்தளவு நடைமுறைப்படுத்துகின்றது? போன்ற ஆய்வு வினாக்களுக்கு இவ் ஆய்வு விடைதேடுகின்றது.*

### *4. **ஆய்வு முறையியல்***

*இவ் ஆய்விற்குப் பண்பு ரீதியான தரவுப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது சிந்தனைகள், கருத்துக்கள், சொற்கள், பதங்கள், போன்ற மனித செயற்பாடுகளுடனும்,*


ISBN: 978-624-5736-55-3

இயற்பண்புகளுடனும் தொடர்புடைய விடங்கள் பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலை தரவான ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பில் இருந்தும் இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிக்கைகள் மற்றும் இணையத்தளங்கள் என்பவற்றில் இருந்து தரவுகள் பெறப்பட்டு தொகுத்தறிப் பகுப்பாய்வின் மூலம் முடிவுகள் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு இது ஒரு மேசை ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

5. **ஆய்வு நோக்கங்கள்**

- இரண்டாம் குடியரசு யாப்பில் அடிப்படை உரிமை தொடர்பாக கூறப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளை அறிதல்.
- ஜனநாயக சோசலிச சமூகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு கடைப்பிரக்கவேண்டிய விதிகள் தொடர்பாக அரசகொள்கை வழிகாட்டல் தத்துவம் எத்தகைய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன என்பதை விளங்கிக் கொள்ளல்.
- இலங்கையின் பொருளாதார நிதி நெருக்கடியின் பின்னணியில் இலங்கை மக்களது மனித உரிமை, அடிப்படை உரிமை எந்தளவு பேணப்படுகின்றது என்பதை அறிதல்.
- பொருளாதார நிதி நெருக்கடியின் கீழ் அரசகொள்கை வழிகாட்டல் தத்துவத்தின் நடைமுறைத் தன்மையை விளங்கிக் கொள்ளல்.

**உரிமைகள்**

பொதுவாக உரிமைகளை ஐந்து பிரிவுக்குள் வகைப்படுத்தி விளங்கிக் கொள்ளலாம். அவை குடியியல் உரிமை, கலாசார உரிமை, பொருளாதார உரிமை, அரசியல் உரிமை, சமுதாய உரிமை என்பனவையே அவையாகும் (Yothilingam, 2007). குடியியல் உரிமை என்பது குடிசார் பிரஜை என்றவகையில் பிரஜைகள் அனுபவிக்கும் உரிமைகளை சுட்டி நிற்கின்றது. அதாவது சட்டத்தின் முன் யாவரும் சமம், சித்திரவதையில் இருந்து விடுபடும் சுதந்திரம் என்பன பிரதானமானதாகும். அடுத்து கலாசார உரிமைகளாகும். இது இரண்டு தளங்களில் நோக்கலாம். ஒன்று கலாசார தேவைகளுடன் தெடர்புடையது. அதாவது அறிவு, ஆற்றல் வளர்ச்சியுடன் தொடர்புடையது. இதில் கல்வி முக்கியமான கலாசார உரிமையாகப் பார்க்கப்படுகின்றது (Ambalavanan, 2008). மற்றைய கலாசார உரிமை கலாசார சமூகங்களுடன் தொடர்புடையது. அதாவது வேறுபட்ட இன, மத, மொழி, பிரதேச, பண்பாட்டு, சமூக பழக்கவழக்கங்களை தமது கலாசாரத்திற்கு ஏற்ப பின்பற்றுவதற்கான உரிமைகளாகும். பொருளாதார உரிமைகளாக உணவுக்கான உரிமை, வேலைவாய்ப்பு உரிமை, தொழிலை பாதுகாப்பதற்கான உரிமை, நல்ல வேதனம் பெறுவதற்கான உரிமை, சொத்துரிமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். அரசியல் உரிமை எனும் போது வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமான பொதுத்தேர்தல், கருத்துக்களை கூறும் உரிமை, அரசியல் கூட்டங்களைக் கூட்டுவதற்கான உரிமை, கட்சிகளை நிறுவுவதற்கான உரிமை போன்ற உரிமைகளைக் குறிப்பிடலாம் (Yothilingam, 2007). சமூக உரிமை எனும் போது சிறந்ததொரு சமூக வாழ்வை அமைத்துக் கொள்ள மக்களுக்குள்ள உரிமை இதுவாகும். அதாவது சுகாதார உரிமை, தொழிலற்றவர்களுக்கான நிவாரண உரிமை, ஓய்வு உரிமை, சமூக காப்புரிமை, போக்குவரத்து உரிமை போன்ற பல்வேறுபட்ட சமூக உரிமைகளாக கூறலாம். இத்தகைய

*உரிமைகளை மக்கள் அனுபவிப்பதற்கு அரசு எவ்வித தடைகளையும் ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு எவரேனும் எந்தவொரு உரிமைகளையும் அனுபவிப்பதற்கு தடையாக இருப்பின் அது மனித உரிமை மீறலாக கொள்ளப்படும்* (Ambalavanan, 2008).

***அடிப்படை உரிமை***

*ஒவ்வொரு நாடும் தங்களுடைய நாட்டு மக்களுக்கான அடிப்படை உரிமைகளை யாப்பு ரீதியாக வரைந்துள்ளது. அந்தவகையில் இலங்கையானது 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் 3 வது அத்தியாயமானது அடிப்படை உரிமைகள் தொடர்பாக 10 தொடக்கம் 17 வரையான விதிகள் கூறுகின்றன. அந்தவகையில் விதி 11 ஆனது, ஆள் எவரையும் சித்திரவதைக்கு அல்லது இழிவான நடத்தைக்கு அல்லது தண்டனைக்கு உட்படலாகாது என கூறுகிறது. விதி 12I ஆனது, சட்டத்தின் முன் ஆட்கள் யாவரும் சமம் என்பதோடு சட்டத்தின் மூலமான சமமான பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்களாகும் என்கிறது. விதி 12 III ஆனது எந்த ஆளும் இனம், மத, மொழி, சாதி பால் போன்ற காரணங்களால் கடைகள், உணவுச் சாலைகள், பொது இடங்கள், தனது மதத்திற்குரிய பொது வழிபாட்டு இடம் என்பனவற்றிற்கு செல்வதற்கு கட்டுப்படுத்தக் கூடாது* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015). ***13 I** ஆனது, சட்டப்படியன்றி ஆள் எவரும் கைது செய்யப்படக் கூடாது என்பதுடன் அவரை கைது செய்யும் போதே அதற்கான காரணத்தையும் அறியத்தரல் வேண்டும் என்கிறது. விதி 13 **II** ஆனது, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆளும் மிகவிரைவில் அண்மையில் உள்ள நீதிமன்றின் முன்பாக ஆஜர் செய்யப்பட வேண்டும் எனக் கூறுகிறது. நீதிபதியின் உத்தரவின்றி அவரைத் தொடர்ந்தும் தடுத்துவைத்தல் கூடாது. விதி 13 **III** ஆனது, குற்றம் சாட்டப்பட்ட ஆள் ஒருவர் நீதிமன்ற விசாரணையின் போது தானாக அல்லது தனது தரப்பு சட்டத்தரணி மூலம் நியாயத்தை எடுத்துரைக்க சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும் எனக் கூறுகிறது* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*விதி 13**IV** ஆனது சட்டப்படியன்றி ஆள் எவரும் தண்டிக்கப்படல் ஆகாது என்பதுடன் புலனாய்வு விளக்கம் முடியும் வரை ஒருவரை தடுத்து வைத்திருத்தல், தண்டனையாக கொள்ளப்படக் கூடாது. விதி 13V கைதான ஆள் ஒருவர் குற்றவாளி என நிரூபிக்கும்வரை சுத்தவாளியாக ஊகிக்க வேண்டும் என்கிறது. விதி 13**VI** ஏதேனும் ஒரு விடயம் புரியப்பட்ட நேரத்தில் குற்றம் என தீர்மானிக்கப்பட்டிராவிடின் அவரை குற்றவாளியாக கருதுதல் கூடாது என்கிறது* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015). *விதி 14, இலங்கையில் வசிக்கும் பிரஜை ஒருவர் தொடர்ச்சியாகவும் அவ்வாறே இலங்கையில் நிரந்தரமாக வசித்து வரும் ஆள் ஒருவர் யாப்பு தொடங்கியதில் இருந்து 10 ஆண்டுகளுக்கு பின்வரும் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவராக இருப்பார். அவை (அ)- பேச்சு, கருத்து வெளிப்படுத்தல் சுதந்திரம், (ஆ)- அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரம், (இ)- ஒருங்கு சேருவதற்கான சுதந்திரம், (ஈ)- தொழிற்சங்கம் ஒன்றை அமைக்கவும் அதில் சேரவுமுள்ள சுதந்திரம், மேம்படுத்தல், தனது சொந்த மொழியை பயன்படுத்தல், (எ)- ஏதேனும் சட்ட முறையான முயற்சியில் அல்லது உயர் தொழில் வியாபாரத்தில் தனியாக அல்லது பிறருடன் சேர்ந்து ஈடுபடல், (ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி பயணிக்கவும் விரும்பிய இடத்தில்*


ISBN: 978-624-5736-55-3

*வசிக்கவுமான சுதந்திரம், (ஐ)- இலங்கைக்கு திரும்பி வருவதற்காக சுதந்திரம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

***அரச கொள்கை தத்துவம்***

*இரண்டாம் குடியரசு யாப்பின் 6 ஆம் அத்தியாயத்தில் 27 தொடக்கம் 29 வரையிலான விதிகள் அரச கொள்கை தத்துவம் பற்றிக் கூறுகின்றது. இவ் யாப்பின் கீழ் அரசின் இலட்சியமாக அமைவது ஜனநாயக சோசலிச சமூகம் ஒன்றை நிறுவுதல் ஆகும். இதனை அடைவதற்கு அரசிற்கு வழிகாட்டுவதற்காக அமைந்துள்ள விதிகளே அரச கொள்கை கோட்பாடுகளாகும்* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015). *அரசு சட்டத்தை இயற்றும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் பின்பற்ற வேண்டிய விதிகள் என்று கூறலாம். அந்தவகையில் 6 ஆம் அத்தியாயத்தில் 27 ஆம் விதி, உபவிதி (2), (3)-(15) இல் இடம்பெற்றுள்ள கொள்கை கோட்பாடுகளாவன, உபவிதி (2) இல் (அ) ஆட்கள் ஒவ்வொருவரும் தமது அடிப்படை உரிமைகள் சுதந்திரங்களை முழுமையாக அனுபவிக்க அரசு வகை செய்தல், (ஆ) சமூக, பொருளாதார, அரசியல் விடயங்களில் நீதியைப் பின்பற்றுவதன் மூலம் சமூக ஒழுங்கு முறையை பேணல், (இ) உணவு, உடை, உறையுள் போன்றவற்றில் எல்லாப் பிரஜைகளும் போதுமான அளவு வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்க வகை செய்தல், (ஈ) பகிரங்க பொருளாதார முயற்சிகள் தனியார் பொருளாதார முயற்சிகள் மூலம் நாடு முழுவதையும் விரைவாக அபிவிருத்தி செய்தல் (உ) நாட்டின் தேசிய உற்பத்தியை எல்லாப் பிரஜைகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளித்தல், (ஊ) உற்பத்தி, பங்கீடு, பரிமாற்றம் போன்றவற்றில் முன்னுரிமைகளை ஒழித்து நீதியான சமூக ஒழுங்கினைத் தாபித்தல், (எ) மக்களின் ஒழுக்கத் தரம், கலாசாரத்தரம், ஆளுமை வளர்ச்சி என்பவற்றை உயர்த்தல் (ஏ) எழுத்தறிவின்மையை ஒழித்து சமத்துவமான கல்விக்கான உரிமையை எல்லாப் பிரஜைகளுக்கும் உறுதிப்படுத்தல், உபவிதி (3) இலங்கையின் ஐக்கியம், இறைமை, சுதந்திரம், தன்னாதிக்கம், ஆள்புல ஒருமைப்பாடு என்பவற்றை அரசு பாதுகாத்தல், உபவிதி (4) நிர்வாகத்தை பண்முகப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் பல்வேறு மட்டத்திலும் மக்கள் பங்குபற்ற வாய்ப்பளித்து ஜனநாயக அமைப்புக்களை பலப்படுத்தி உரிமைகளை விரிவுபடுத்தல், உபவிதி (6) பிரஜைகள் அனைவருக்கும் இன, மத, மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை முதலிய வேறுபாடுகளின்றி சமவாய்ப்புக்களை உறுதிப்படுத்தல், உபவிதி (7) சமூக ஏற்றத்தாழ்வையும் சுரண்டலையும் ஒழித்தல், உபவிதி (8) பொருளாதார ஒழுங்கமைப்பில் செல்வமும், உற்பத்தி சாதனங்களும் பொது மக்களை பாதிக்கும் வகையில் ஒரு சிலரிடம் குவிவதை தடுத்தல், உபவிதி (9) அரசானது சமூக பாதுகாப்பையும் சேமநலனையும் உறுதிப்படுத்தல், உபவிதி (10) மக்களின் கலாசாரம், மொழி என்பவற்றை அபிவிருத்தி செய்ய உதவுதல், உபவிதி (13) பிள்ளைகள், இளம் ஆட்களின் உடல், உள, ஒழுக்க, மத, வளர்ச்சியை விருத்தி செய்யும் அதேவேளை அவர்களின் நலன்களை மேம்படுத்துதல், உபவிதி (14) சூழலைப் பாதுகாத்தல், (15) சர்வதேச சமாதானம், பாதுகாப்பு, ஒத்துழைப்பு என்பவற்றை பேணுதல்*(The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).


ISBN: 978-624-5736-55-3

### *6.* ***ஆய்வின் கண்டுபிடிப்புக்கள்***

#### *6.1.* ***கல்வி உரிமை சவால்***

*எரிபொருள் பற்றாக்குறையினால் ஏற்பட்ட பாதகவிளைவுகளில் நீண்ட நேர மின் வெட்டும் ஒன்றாகும்* (acaps.org, 2022). *அதாவது குறைந்தது 13 மணி நேர மின்வெட்டு தொடர்ச்சியாக சில காலங்களில் ஏற்பட்டது. இதனால் சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் தங்களினுடைய இரவு நேர சுயகற்றல் உரிமையினை இழக்க நேரிட்டது. மேலும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட காகிதப் பற்றாக்குறையால் பாடசாலைகளில் உயர்தர மற்றும் சாதாரண தர பரீட்சைகள் பிற்போடப்பட்டன* (Silva, 2022). *இதனால் உரிய காலத்தில் பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க முடியாத சவால்கள் ஏற்பட்டது. அத்தோடு பல்கலைக்கழக மாணவர்களது பட்டப்படிப்பும் கால தாமதமாவதற்கு இப் பொருளாதார நெருக்கடி காரணமாகியது. இவர்களது ணழழஅ மூலமான கற்றல் கற்பித்தலின் போது மின் வெட்டு மற்றும் நேவறழசம பிரச்சினை என்பன ணழழஅ மூலமான கற்றல் கற்பித்தலை சவாலுக்குறப்படுத்தியது எனலாம். இங்கு அரசானது கல்விக் கலாசார உரிமையை மீறியதோடு அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (2) (ஏ) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Constitution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

#### *6.2.* ***அடிப்படை உணவு சவால்***

*அரிசி, சக்கரை, பால் மா பவுடர், வெங்காயம், உருளைக்கிழங்கு சமையல் எரிவாயு மற்றும் பெற்ரோல் உட்பட அனைத்து அத்தியவசியப் பொருட்களும் பெருளாதார நிதி நெருக்கடி காரணமாக இறக்குமதி தடை ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் இதனைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் வாழ்வியல் சிக்கல்களை எதிர் கொள்கின்றனர்* (Puthiyathalaimurai .com). *இதனால் அடிப்படை உணவு தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் போணதால் பஞ்சம், பசி பட்டினி என்பன சமூக மட்டத்தில் பரவலாக ஏற்படத் தொடங்கியது. பால் மாவை நம்பி இருக்கும் குழந்தைகளின் ஆரோக்கியம் என்பது இங்கு கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. அத்தோடு பொருட்களுக்கான கேள்வி அதிகரித்ததால் விலை பன்மடங்காக அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் சாதாரண பொதுமக்களுக்கு உள்நாட்டில் கிடைக்கும் அத்தியவசிய உணவுப் பண்டங்களைக்கூட பெற்றுக் கொள்வது சவாலாக இருந்தது. இங்கு அரசானது சமூக உரிமையை மீறியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (2) (இ) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Constitution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*இந்நிலையில் பொருட்களை கறுப்புச் சந்தையில் பெற்றுக் கொள்கின்ற நிலை சமூக மட்டத்தில் அதிகரித்தது. பொருட்கள் பதுக்கல் நிலை தொடர்ந்தும் அதிகரித்தது. இதனால் இத்தகைய விலை உயர்விற்கு முகம் கொடுக்க முடியாமல் நாட்டு மக்கள் திண்டாடுகின்றனர். இதன் போது உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தவுடம் சில பொருட்களின் தட்டுப்பாட்டுக்கு மத்தில்*


ISBN: 978-624-5736-55-3

*பதுக்கள் வியாபாரத்தைக் குறைக்கவும் அரசு உணவு அவசரகால நிலையினை பிரகடணப்படுத்தியது* (Silva, 2022).*). எவ்வாறு இருப்பினும் இன்று அனைத்து பொருட்களும் கறுப்புச் சந்தையில் விற்கப்படுவதோடு பொதுமக்கள் பல்வேறு நிலைகளில் சுரண்டப்படுகின்றனர். எனவேதான் அரசானது, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (7) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Constitution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*ஒரு புறம் அடிப்படைத் தேவைக்காக வரிசையில் நின்றவர்கள் தங்களது வேலை நேரங்களை இழந்தனர். இதனால் அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கத் தொடங்கியது. மறுபுறம் பெற்றோலுக்காகவும், எரி வாயு மற்றும் மண்ணெண்ணெய்காகவும் இளம் யுவதிகள் வரிசையில் நின்று தங்களது வாழ்நாளை செலவு செய்கின்றனர். இதனால் அவர்களது தொழில், கல்வி என்பன பாதிக்கப்படுகின்றது. இங்கு அரசானது சமூக, பொருளாதார உரிமைகளை மீறியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (2) (ஈ), (7) என்பனவற்றை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Constitution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*6.3.* ***மருந்து இன்மை***

*இலங்கையானது 85 சதவீத மருந்துப் பொருட்களை வெளிநாட்டு நாணயத்தைப் பயன்படுத்தி இறக்குமதி செய்வதால் சில முக்கிய மருந்துகள் பற்றாக்குறையாக உள்ளது* (Mishra, 2022). *குறிப்பாக 2,700 அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கையிருப்பில் இல்லை* (acaps.org, 2022). *எதிர்வரும் காலங்களில் இவ் பற்றக்குறை அதிகரிக்கப்படவுள்ளது. இங்கு அரசானது சமூக உரிமையை மீறியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (9), (2)-(அ) என்பனவற்றை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*6.4.* ***வேலையின்மை***

*இலங்கையின் வாழ்வாதாரத்தைப் பொருத்தமட்டில் சுமார் மூன்று மில்லின் மக்கள் இலங்கையின் சுற்றுலாத்துறையை நம்பி உள்ளனர்* (Silva, 2022). *கொவிட்-19 நெருக்கடியின் போது சுற்றுலா மையங்கள் மூடப்பட்டன. கொவிட்-19 பின்னரான பொருளாதார நெருக்கடியினால் அடிப்படை வசதிகளற்ற நாடாக இலங்கை மாறியதால் உள்ளாச சுற்றுலாத்துறைக்காக இலங்கையினை தெரிவு செய்ய வேண்டாம் என வல்லரசு நாடுகள் தங்களுடைய நாட்டு மக்களுக்கு எச்சரித்தது. இதனால் மேலும் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது. இதனால் சுற்றுலாத்துறையினை நம்பியிருந்த மக்களது வாழ்வாதாரம் கேள்விக்குள்ளானது. மேலும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெரும்பாலும் மீன்பிடித்துறையை வாழ்வாதாரமாகக் கொண்டு காணப்படுகின்றனர். எரிபொருள் இன்மை காரணமாக மீன்பிடித்துறை பாதிக்கப்பட்டு இவர்களது வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது* (acaps.org, 2022). *இங்கு அரசானது சமூக பொருளாதார உரிமைகளை சவாலுக்குட்படுத்தியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (2) (அ), (7) என்பனவற்றை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்*


ISBN: 978-624-5736-55-3

(The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*6.5.* ***விவசாயம்***

*இலங்கையின் விவசாயிகள் விவசாய நடவடிக்கையின் போது பெருமளவில் இரசாயண உரங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தனர். கோதாபாய ராஜபக்~ அரசாங்கம் திடீரென இரசாயண உரங்களுக்கான தடையை விதித்துள்ளதால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளர். குறிப்பாக உள்நாட்டு உற்பத்தியை இது வெகுவாக பாதித்தது. இதனால் உள்நாட்டு அரசி உற்பத்தி 20%ஆலும் தேயிலை 40%ஆலும்குறைந்தது* (Mishra, 2022). *இதனால் நாடு முழுவதும் உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்து கோரும் விவசாயிகளின் போராட்டம் தீவிரம் அடைந்தது. இவர்களது வாழ்வாதாரமும் பாதித்ததோடு தொழில் வாய்ப்புக்களும் பாதிக்கப்பட்டது. இங்கு அரசானது பொருளாதார சமூக உரிமைகளை மீறியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (2) (ஈ) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*6.6.* ***உயிர் வாழ்வது சவால்***

*சராசரியாக அத்தியவசியத் தேவைகளை பெற்றுக் கொள்வதற்கான வரிசையில் நிற்கும்போது குறைந்தது 5 பேர் இறந்துள்ளனர்* (Ruwanpathirana, 2022). *இது இம்மக்களின் உயிர்வாழுவதற்கான உரிமையை கேள்விக்குள்ளாக்குகின்றது எனலாம். பொருளாதாரம் தஞ்சம் கோரி இந்தியாவிற்கு 90 பேர் கடல் வழியாக தமிழ் நாட்டை அடைந்துள்ளனர். இங்கு அரசானது பொருளாதார சமூக உரிமைகளை மீறியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (9) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*6.7.* ***கருத்து சுதந்திரமின்மை***

*ஜனாதிபதி கோதாபாய ராஜபக்~, முன்னாள் பிரதமர் மகந்த ராஜபக்'வை பதவியில் இருந்து விலக கோரியும் ஆயிரக்கணக்கானோர் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதிகரித்த எதிர்ப்புணர்வால் அரசாங்கமானது எதிர்ப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக சட்டவிரோத சக்திகளை பயன்படுத்தியது. தன்னிச்சையான கைதுகள், சித்தரவதைகள் மூலம் கருத்து சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது. அத்தோடு சமூக ஊடகங்கள் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் திகதி முடக்கப்பட்டது* (Mishra, 2022). *இது கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடாகும். இங்கு அரசானது அடிப்படை உரிமை அத்தியாயம் 03, விதி 14- (அ) இனை மீறியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (3) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).


ISBN: 978-624-5736-55-3

*6.8.* **ஒன்றுகூடுவதற்கான உரிமை மீறல்**

*பொருளாதார நிதி நெருக்கடி அத்தியாவசிய பொருட்கள் இன்மை போன்ற காரணத்தால் பொது மக்கள் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுத்தனர். இதன் போது காலி முகத்திடலில் அமைதியான ஒன்று கூடலின் மூலம் தமது எதிர்புணர்வுகளை அமைதியான முறையில் வெளிப்படுத்தினர்* (Ruwanpathirana, 2022). *இதன் போது பல சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினர் பலாத்காரத்தின் மூலமும் கண்ணீர் புகைகளினூடாகவும் ஒன்று கூடும் மக்களை களைத்தனர். இச் செயற்பாடு அமைதியாக பொதுமக்கள் ஒன்று கூடுவதற்கான அடிப்படை உரிமை மீறலாக உள்ளது எனலாம். அதாவது அடிப்படை உரிமை அத்தியாயம் 3 விதி 14 (அ) இனை* (The Consititution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015). *அத்தோடு போராட்ட காரர்கள் அமைதியான முறையில் நடமாடும் சுதந்திரத்தை சட்டவிரோதமாக கட்டுப்படுத்தினர்* (Ruwanpathirana, 2022). *குறிப்பாக 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாடு தழுவிய ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. இதனால் மக்கள் சுதந்திரமாக நடமாடும் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடும் உரிமை கட்டுப்படுத்தப்பட்டது. அத்தோடு ஏப்ரல் 24 ஆம் திகதி பல்கலைக்கழக மாணவ போராட்டகாரர்கள் வலுவாக ஒன்றிணைவதைத் தடுக்கும் வகையில் வீதிகளை மறித்து பொதுமக்களின் நடமாட்டச் சுதந்திரத்தை பொலிஸ் தடை செய்தது. இங்கு அரசானது அடிப்படை உரிமை அத்தியாயம் 3, விதி 14- (ஏ) மீறியதோடு, அரசகொள்கை தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (9) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Constitution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015).

*6.9.* **வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டமை**

*இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக தமது உரிமைக்காக போராடிய போராட்டகாரர்களை திட்டமிட்ட வகையில் காடர் கும்பல் தாக்கியது. இதனை காவல்துறை பல நேரங்களில் கண்டும் காணாதது போல் இருந்தது. இதனால் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதோடு அவர்களது உடைமைகள் எரியூட்டப்பட்டன. குறிப்பாக கோட்டா கோ கம கூடாரங்கள் எரியூட்டப்பட்டு உடமைகள் அழிக்கப்பட்டது. இத்தகைய வன்செயலின் பின் காவல்துறையினர் தலைநகரில் சில பகுதியை இரவு முழுவதுமாக ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தியது* (Silva, 2022). *இதன் போது 50 மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி ரம்புக்கனையிர் உரிமைக்காக போராடிய போராட்டகாரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு நடாத்தினர். இதில் ஒரு நபர் சுட்டுக் கொள்ளப்பட்டதோடு 12 பேர் காயம் அடைந்தனர். இதில் சிலர் படுகாயம் அடைந்தனர். இதில் சிறுவன் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இழக்கானான். இது சிறுவர் உரிமை மீறல் ஆகும். அத்தோடு இவ் வன்முறை சம்பவத்தில் பொதுமக்கள் மீது **T**-56 ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதோடு 35 தோட்டாக்கள் பயன்படுத்தப்பட்டு இருந்தன* (Mishra, 2022). *இது அடிப்படை உரிமை அத்தியாயம் 03, விதி 10 இனை மீறுகின்றது. மேலும் அரசானது சமூக உரிமையை மீறியதோடு தனது அரசகொள்கை*

*தத்துவதில் அத்தியாயம் 5, விதி 27 (9) இனை அரசு கடைப்பிடிக்கத் தவறியுள்ளது எனலாம்* (The Constitution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015). *குறித்த வன்முறை சம்பவம் தொடர்பாக பொலிசார் அப்பகுதி சாட்சியங்களை மிறட்டியதாகவும் நீதிமன்ற அறிக்கைகளை மாற்றறியதாகவும் காவல்துறை மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் குறித்த ரம்புக்கனை வன்செயலை விசாரிக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாடு செய்யப்பட்டு வன்செயலுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர்.*

***7. முடிவுரை:***

*இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதிநெருக்கடி நிலை காரணமாக இலங்கை வாழ் மக்களினுடைய வாழ்வாதாரம், அரசியல், சமூக, பொருளாதார செயற்பாடுகளை பாதித்துள்ளது. அதாவது எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எரிபொருட்களை பெரும்பொருட்டு நீண்ட வரிசையில் நிற்பதால் தமது வேலை நேரங்களை இழக்கின்றனர். இதனால் பொருளாதார உரிமை சவாலுக்குட்படுவதோடு அரச கொள்கை வழிகாட்டல் தத்துவத்தின் கீழ் விதி 27 (2) (ஈ) ஆனது பகிரங்க தனியாள் முயற்சி, தனியாள் பொருளாதார முயற்சியின் மூலம் நாடு முழுவதையும் விரைவாக அபிவிருத்தி செய்ய தவறியுள்ளது எனலாம். அத்தோடு அரச கொள்கை தத்துவத்தின் விதி-27 (9) கீழ் சமூக பொருளாதார சேம நலனையும் அரசு உறுதிப்படுத்த தவறியுள்ளதால் இலங்கையினது அத்தியவசிய மருந்து பற்றாக்குறை மற்றும் அத்தியவசிய பொருட்களுக்காக போராடி வரிசையில் நின்று உயிரிழப்புக்கள் ஏற்பட்டதோடு நாட்டை விட்டு மக்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இவ் அபாயம் அதிகரிக்கக் கூடிய நிலை உள்ளதால் சமூக உரிமை தொடர்ந்தும் பேராபத்தில் உள்ளது எனலாம். மேலும் கல்வி கலாசார உரிமையானது தொடர்ந்தும் பாதித்துள்ளது எனலாம். அத்தோடு அரசகொள்கைத் தத்துவத்தின் விதி 27 (7), (2)- (அ) கீழ் சமூக ஏற்றத்தாழ்வையும் சுரண்டலையும் ஒழிக்கத் தவறியுள்ளதோடு, சமூக பொருளாதார, அரசியல் விடயங்களில் நீதியை பின்பற்றத் தவறியுள்ளது. மேலும் இத்தகைய முறையற்ற நிர்வாக செயற்பாட்டினால் சுற்றுலாத்துறை, விவசாயம் பாதிக்கப்பட்டு மக்களது வாழ்வாதார உரிமை கேள்விக்குள்ளாகியுள்ளது. மேலும் இத்தகைய நிதி நெருக்கடியினால் அதிகரித்த அரச எதிர்ப்பைத் தெரிவிக்கும் கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டதோடு சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டமை அடிப்படை உரிமை அத்தியாயம் 03, விதி 14 (அ) இனை மீறுகிறது. அத்தோடு நிதி நெருக்கடி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டதோடு சுடப்பட்டு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். இது அடிப்படை உரிமை அத்தியாயம் 03, விதி 14 இனை மீறுகின்றது. அதாவது (அ)- பேச்சு, கருத்து வெளிப்படுத்தல் சுதந்திரம், (ஆ)- அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரம், (இ)- ஒருங்கு சேருவதற்கான சுதந்திரம், (ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி பயணிக்கும் உரிமைகளை மீறுகின்றது எனலாம். எனவேதான் இலங்கையில் உள்ள மக்கள் பொருளாதார நெருக்கடியின் போது அரசாங்கம் அனைத்து மக்களினதும் மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும். மற்றும் அமைதியான முறையில் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தும் சூழலை உறுதி செய்ய வேண்டும் என்பதோடு, இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது பொருளாதார உரிமைகள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஆகியவற்றோடு ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. எனவே*


ISBN: 978-624-5736-55-3

*இத்தகைய பொருளாதார நிதிநெருக்கடியை சீர்செய்ய சுற்றுலாத்துறை, ஆடை ஏற்றுமதி துறை, தேயிலை ஏற்றுமதித்துறை ஆகிய மூன்று துறைகளையும் வளர்ச்சி அடைய செய்வதன் ஊடாகவே பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகரமுடியும். 1977 ஆம் ஆண்டு திறந்துவிடப்பட்ட இலங்கைப் பொருளாதாரம் தற்போது மூடப்பட்டுள்ளது. நாடு பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டுமாயின் நாடு மூடிய பொருளாதார கொள்கையைக் கைவிட வேண்டும். எனவேதான் இலங்கையின் பொருளாதார எதிர்காலம் பற்றிய சிந்தனை என்பது மனித உரிமைகளை மையமாகக் கொண்டு இருக்க வேண்டும் எனலாம்.*

***8. உசாத்துணைகள்***


Acaps.org, (2022), Socio-Economic Crisis, Available at: https://www.acaps.org/country/sri-lanka/crisis/socio-economic-crisis

Ambalavanan.S, (2008), *அரசறிவியல் மூல தத்துவங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை*

Arun Prasath.R, (2020), *இலங்கைப் பொருளாதாரம் சரிவு: வரலாறு காணாத வீழ்ச்சியில் இருந்து மீளுமா தீவு தேசம்?*

CNN, (2022), Sri Lanka in crisis after president flees, Available at: https://www.cnn.com/asia/live-news/sri-lanka-protests-07-13-22-intl/index.html

Lingham.J, (2022), Sri Lanka: Protests spread as petrol prices eise by 90%, https://theconversation.com/sri-lanka-protests-spread-as-petrol-prices-rise-by-90-182105

Lisa S, (2022), UN Calls for More Human Rights Reforms in Sri Lanka, Available at: https://www.voanews.com/a/un-calls-for-more-human-rights-reforms-in-sri-lanka-/6459494.html

Niro.K, (2022), The Sri Lankan state is using violence to Unleash fury on its citizens, as its political and economic crisis deepens, Available at: https://theconversation.com/the-sri-lankan-state-is-using-violence-to-unleash-fury-on-its-citizens-as-its-political-and-economic-crisis-deepens-182937

Monitor-civicus-org, (2022), Assault on civic freedoms continue in Sri Lanka as economic crisis hits the country, Available at: https://monitor-civicus-org.translate.goog/updates/2022/03/29/assault-civic-freedoms-continue-sri-lanka-economic-crisis-hits-country/?_x_tr_sl=auto&_x_tr_tl=en&_x_tr_hl=en-US

Mishra.Y, (2022), Sri Lanka: Rights under attack during economic crisis, Available at: https://www.amnesty.org/en/latest/news/2022/05/sri-lanka-rights-under-attack-during-economic-crisis/

Soumya. B, (2022), Understanding the Economic Issues in Sri Lanka's Current Debacle,

The Constitution of the democratic socialist republic of Sri Lanka, as amended up to 15th May 2015

Veeramani, (2022), *இலங்கையில் உணவுப் பஞ்ச அபாயம்: பொருளாதார அவசர நிலையும் பின்புலமும்- ஒரு பரார்வை,* Available at: https://www.puthiyathalaimurai.com/newsview/114615/Sri-Lanka-at-risk-of-famine-Implementation-of-the-Economic-Emergency-Declaration-An-Overview

Yasoda.W, (2022), Stand in Solidarity with Sri Lanka as the Country's Economic Crisis Devastates the Human Rigts of the Citizenry, Available at: https://www.mcgill.ca/humanrights/article/stand-solidarity-sri-lanka-countrys-economic-crisis-devastates-human-rights-citizenry

Yothilingam.S.A, (2007), *அரசறிவியல் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.*